**செ. கு. எண்: 220** **நாள்:08.10.2020**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் இரங்கல் செய்தி – 8.10.2020</u>

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், தீர்த்தாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த சுதந்திர போராட்ட வீரர் திரு. ஜெயவீரன் அவர்கள் 7.10.2020 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்ட முக்கிய வீரர்களில் திரு. ஜெயவீரன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவரது தாயார் திருமதி அஞ்சலை அம்மாள் அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறையிலிருந்த போது திரு. ஜெயவீரன் பிறந்துள்ளார். திருமதி அஞ்சலை அம்மாள் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய தந்தை திரு. முருகப்படையாச்சி அவர்களும் சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர். இவருடைய குடும்பம் முழுவதுமே நாட்டிற்காக பாடுபட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திர போராட்ட வீரர் திரு. ஜெயவீரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**